
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1025

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

**மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிபுல்லா**

38

**தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்**

## பொது உரிமையியல் சட்டம்! உறுதியோடு எதிர்த்த கழகம்!



இந்திய நாட்டில் உரிமையியல் (சிவில்) மற்றும் குற்றவியல் (கிரிமினல்) என இரு வகையாக சட்டங்கள் உள்ளன. இதில் குற்றவியல் சட்டம் அனைவருக்கும் பொதுவானது. அதில் யாருக்கும் எந்தப் பாகுபாடும் கிடையாது. மனு சாஸ்திரம் கூறுவது போல இன்னாருக்கு இந்த தண்டனை என குற்றவியல் சட்டத்தில் பாகுபாடு கிடையாது.

உரிமையியல் சட்டத்தில் மட்டும் மதம், பழக்கவழக்கம், பாரம்பரியம் ஆகியவற்றின் அடிப்படையில் சில தனி நபர் சட்டங்கள் உள்ளன. அதிலும் கூட 80% அம்சங்கள் அனைவருக்கும் பொதுவானவைதான். மக்கள் தாங்கள் பின்பற்றும் மதம் தொடர்புடைய மிகச் சில அம்சங்கள் மட்டும் தனி நபர் சட்டங்களில் மாறுபடுகின்றன.

குறிப்பாக, இந்து மதத்தைப் பொறுத்தவரை குடும்பவியல், திருமணம், வாரிசு, சடங்கு, கூட்டுக் குடும்ப முறை, குழந்தைகளைத் தத்தெடுத்தல், ஜீவனாம்சம், மலைவாழ் மக்களின் பழக்கவழக்கம் என பல்வேறு இந்து தனி நபர் சட்டங்கள் உள்ளன. ‘ஷரியத்’ சட்டத்தின் அடிப்படையில் ‘முஸ்லிம் தனிநபர் சட்டம்’ 1937-இல், சுதந்திர இந்தியாவுக்கு முன்பே இயற்றப்பட்டது. முஸ்லிம் தனிநபர்கள், குடும்பம், திருமணம், மணமுறிவு, வாரிசு, வக்பு உள்ளிட்ட தொண்டு நிறுவனங்களைக் கையாள்வது, இந்த ஷரியத் சட்டத்தில் உள்ளன. அதேபோல, சீக்கியர்கள் எந்நேரமும் கத்தி வைத்திருக்கவும், காவல்துறை மற்றும் ராணுவத்தில் பணிபுரிந்தாலும்கூட அங்குள்ள விதிகளுக்கு மாறாக, அவர்கள் தாடி மற்றும் தலையில் டர்பன் அணிந்து கொள்ளவும் தனி நபர் சட்டம் அனுமதிக்கிறது.

அதாவது இந்தப் பிரிவுகள் அனைத்து மக்களும் தங்களது மத நம்பிக்கைகள் மற்றும் பழக்கவழக்கங்களைப் பின்பற்றிக் கொள்வதற்கான உரிமையாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இடம் பெற்றுள்ளன. ஆனால், இந்தப் பிரிவுகள் தேவையில்லை, பொதுவான சிவில் சட்டங்களே போதுமானது என்ற குரல்களைக் கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக ஆரியவாதிகள் எழுப்பிக்கொண்டே இருக்கின்றனர். மேலோட்டமாகப் பார்த்தால், ‘இது சரிதானே, அனைத்து மதங்களுக்கும் பொதுவான சிவில் சட்டம் இருந்தால் என்ன?’ என்று தோன்றலாம். ஆனால், அதற்குள்ளும் சிறுபான்மையினருக்கு எதிரான ஆரிய அரசியல் புதைந்திருக்கிறது என்பதை சற்று உற்று நோக்கினால் எளிதாகப் புரிந்து கொள்ளலாம்.

இந்துக்களில் எல்லோரும் சமம் என்ற சமூகநீதி உரையாடலை, ஒரு நூற்றாண்டு காலமாக திராவிட இயக்கம் முன் வைத்து வருகிறது. ‘பிறப்பால் எவரும் உயர்ந்தவரும் இல்லை, தாழ்ந்தவரும் இல்லை, அனைவரும் சமம்’ என்ற கருத்துக்கு இன்றுவரை ஆரியம் செவிமடுக்க மறுக்கிறது. எல்லோரையும் சமன்படுத்த திராவிட இயக்கம் ஏந்திய இடஒதுக்கீட்டுக்கு வரலாறு நெடுகிலும் முட்டுக்கட்டை போட்டனர், வழக்குகள் தொடுத்தனர், இன்றோ உயர்சாதி ஏழைகளுக்கான இடஒதுக்கீட்டை நுழைத்து, இடஒதுக்கீட்டுக் கொள்கையில் பெருத்த ஓட்டையைப் போட்டிருக்கின்றனர். இப்படி இந்துக்களுக்கு உள்ளேயே சமத்துவத்தை ஏற்படுத்த விரும்பாத இந்த ஆரியவாதிகள், வெவ்வேறு பண்பாட்டுச் சூழல்களில் வாழும் மற்ற மதத்தினருக்கு, அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள மிகச்சில தனித்துவமான உரிமைகளையும் பறித்துவிட வேண்டும் என்ற நோக்கத்தில், எழுப்பப்படும் விஷமச் சிந்தனையே பொதுசிவில் சட்டம். அதனை உணர்ந்துதான் திராவிட முன்னேற்றக் கழகம் இதனைக் கடுமையாக எதிர்க்கிறது.

### தனிநபர் சட்டங்கள்

இந்தியா விடுதலை அடைந்த பிறகு, அம்பேத்கர் தலைமையில் அமைக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையில் பொது சிவில் சட்டம் குறித்து விவாதிக்கப்பட்டது. தொடக்கத்தில், அரசியல் சட்டம் வழிகாட்டும் கோட்பாடு எண்-37 ஆக இடம் பெற்றிருந்த பொது சிவில் சட்டம், அரசியல் நிர்ணய சட்டம் நிறைவேறியபின் கோட்பாடு எண்-44 ஆக இடம் பெற்றது. அதன்படி குடிமக்கள் அனைவரும் ஒரே சீரான உரிமையியல் சட்டத்தை இந்தியா முழுவதிலும் அமுல்படுத்துவதற்கான முயற்சிகளை அரசு எடுக்க வேண்டும் என்றது. இதனால், தாங்கள் பின்பற்றும் ஷரியத் சட்டம் ஆபத்துக்குள்ளாகுமோ என்ற அச்சத்தில் அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்களான முகமது இஸ்மாயில் சாகேப், நசிருத்தீன் அகமது, மகபூப் அலி பெய்க் மற்றும் பாக்கர் சாகேப் பகதூர் போன்றவர்கள் திருத்தங்கள் கொண்டு வந்து, தங்கள் தனிநபர் சட்டங்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென கோரினர். அதற்கு அவர்கள் யூகோஸ்லாவியா, செர்பியா, குரேஷியா மற்றும் ஸ்லோவேனிய நாடுகளில் சிறுபான்மை இனத்தவருக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பை சுட்டிக்காட்டி, அதே போன்றதொரு பாதுகாப்பை இங்கேயும் வழங்கக் கோரினர்.

அரசியல் சட்டத்தின் மூன்றாம் பாகமான அடிப்படை உரிமைகள் என்ற தலைப்பில், இடம் பெற்றிருக்க வேண்டிய இந்தக் கோட்பாடு, துணைக் குழுவில் ஒரு ஓட்டு வித்தியாசத்தில் தோற்றுப்போனதால் வழிகாட்டும் நெறிமுறைகள் என்ற நான்காம் பாகத்தில் இடம்பெற்றது. வழிகாட்டும் நெறிமுறையில் உள்ள கோட்பாடுகள் 37 முதல் 51 வரை பெரும்பாலும் இன்றுவரை அமல்படுத்தப்படாமல்தான் உள்ளன என்பது வேறு கதை. அதற்குள் செல்லாமல், இப்போது பொது சிவில் சட்டம் கேட்பவர்கள், அரசியலமைப்புச் சட்டம் உருவானபோது இந்துக்களுக்கு பொது சிவில் சட்டம் கொண்டு வர வேண்டுமென்ற அம்பேத்கரின் கருத்தை ஏற்றார்களா?

சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரான நேரு, நாடு முழுவதும் இந்துக்களுக்கு ஒரு பொதுவான சிவில் சட்டத்தைக் கொண்டுவர இந்து தனிநபர் சட்டங்களை தொகுக்க, அம்பேத்கர் தலைமையில் ஒரு குழு அமைத்தார். பெண்களுக்கு சம உரிமை, சொத்துரிமை, விவாகரத்து உரிமை வழங்க வேண்டுமென்பதில் அம்பேத்கருடன் நேருவும் ஒத்த கருத்து கொண்டிருந்தனர். அத்தகைய கருத்துகளையொட்டி அம்பேத்கர் முயன்று உருவாக்கிய மசோதாவை ஆரிய பழமைவாதிகள் கண்மூடித்தனமாக எதிர்த்தனர். அன்றைய குடியரசுத் தலைவராக இருந்த இராஜேந்திர பிரசாத் இந்த மசோதா இந்து பாரம்பரியத்துக்கு எதிரானது என்றும், ஒவ்வொரு இந்து குடும்பத்தையும் பாதிக்கும் என்று கூறியதோடு, மசோதா நிறைவேறினாலும் சட்ட அங்கீகாரம் பெற தன்னுடைய கையெழுத்து கிடைக்காது என்பதையும் உணர்த்தினார். அம்பேத்கர் பதவி விலக இதுவும் ஒரு காரணமாக அமைந்தது.

> “இந்துக்களுக்கு உள்ளேயே பொது சிவில் சட்டத்தை விரும்பாதவர்கள், அனைத்து மதங்களுக்கும் பொதுவான சிவில் சட்டம் கேட்பதன் உள்நோக்கத்தை மற்ற எவரையும் விட திராவிட முன்னேற்றக் கழகம் எளிமையாகப் புரிந்துகொண்டது.”

இப்படி இந்துக்களுக்கு உள்ளேயே பொது சிவில் சட்டத்தை விரும்பாதவர்கள், அனைத்து மதங்களுக்கும் பொதுவான சிவில் சட்டம் கேட்பதன் உள்நோக்கத்தை மற்ற எவரையும் விட திராவிட முன்னேற்றக் கழகம் எளிமையாகப் புரிந்துகொண்டது. அன்று பொது சிவில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக 10.10.2022 அன்று நாடாளுமன்ற நிலைக்குழுவை அமைத்தது ஒன்றிய அரசு. 22-வது சட்ட ஆணையம் 14.06.2023 அன்று வெளியிட்ட அறிக்கையில், ‘பொது சிவில் சட்டம் தொடர்பாக பொதுமக்கள் மற்றும் மத அமைப்புகள் 30 நாட்களுக்குள் கருத்துகள் தெரிவிக்கலாம்’ என்று தெரிவித்தது.

அந்த வகையில் தி.மு.கழகத்தின் பொதுச்செயலாளரும், அன்றைய சட்ட அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் பதில் கடிதம் அனுப்பினார். தமிழ்நாடு முதலமைச்சர், தி.மு.கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் ஒருமுறை தி.மு.கழகம் என்பது, பல ஆறுகள் கலப்பினும் தன்னுடைய தனித்தன்மையை இழக்காத கடல் போன்றது. பொது சிவில் சட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம் வலிமையாக எதிர்க்கிறது” என விரிவான பதில் கொடுத்தார்.

...நீளும்

## ‘வால்காவிலிருந்து கங்கை வரை- மக்கள் பதிப்பு!




இந்திய இலக்கியங்களில் ஈடு இணையற்ற நூல், அறிஞர் ராகுல சாங்கிருத்யாயன் எழுதிய ‘வால்காவிலிருந்து கங்கை வரை’. 20 அத்தியாயங்களில் மனித குல வரலாற்றை, சுவையோடு சொல்லும் மிகச் சிறந்த நூல். தமிழில் ஏற்கெனவே ஆயிரக்கணக்கில் விற்பனையான இந்த நூலை மக்கள் பதிப்பாக வெளியிடுகிறது சீர் வாசகர் வட்டம்.

பேராசிரியர் அ.மங்கை அவர்களின் கவித்துவமான மொழியாக்கத்தில், 424 பக்கங்கள் கொண்ட நூலை, 100 ரூபாய் விலையில் முன்வெளியீட்டுத் திட்டத்தில் அறிவித்தனர். அறிவிப்பு வெளியிட்ட 24 மணி நேரத்துக்குள் 15,000 படிகள் முன்பதிவு செய்யப்பட்டு வரவேற்பினைப் பெற்றுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் 88 இடங்களில் முன்பதிவு நடைபெற்றுள்ளது.தமிழ் வாசிப்பு உலகத்தை, மக்கள் பதிப்பு நூல்கள் மூலம் ஊக்கத்தோடு இணைத்து வருகிறது சீர்வாசகர் வட்டம். இயக்கமாக இயங்கிக் கொண்டிருக்கும் இந்த வாசகர் வட்டத்தின் தகவல்களை அறிய, கீழ்க்கண்ட வாட்ஸ்அப் குழுவில் இணைந்து விவரங்களைப் பெறவும்.

## ப்ளாஷ்பேக்





ப.விநாயகம்

### தளபதி அவர்களை வாழ்த்திய தருணம்!

2017-ஆம் ஆண்டு, செயல் தலைவராக இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்கள் பொறுப்பேற்றபோது, அறிவாலயத்தில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்து மகிழ்ந்தேன்.

**- ப.விநாயகம், 7-வது பாக முகவர், 71-வது வட்டம், திரு.வி.க. நகர் வடக்கு சென்னை கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நல்வருகை

### அண்ணாவின் பேருரை - ஆட்சியர் அமைதி!

1958-ஆம் ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற கருப்புக்கொடி போராட்டத்தின் போது நடைபெற்ற போலீஸ் அராஜகம் குறித்தும், அரசின் நடவடிக்கைகள் குறித்தும், பேரறிஞர் அண்ணா சட்டமன்றத்தில் நீண்ட பேருரை நிகழ்த்தினார். அண்ணாவின் பேச்சுக்கு விளக்கம் அளிக்க முடியாமல் அன்றைய ஆட்சியாளர்கள் அமைதியாகவே இருந்தனர்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.